


ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 6 | நவம்பர் 2000 | கானம் : 4

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 6 | நவம்பர் 2000 | கானம் : 4

## விஷய ஸூசிகை

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 60 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 7 |
| 4. | வேத கதைகள் - 42 | 10 |
| 5. | ஶ்ராத்தம் செய்யும் ஆராவமுதன் | 12 |
| 6. | எந்தரோ மஹானுபாவுலு - 30 | 13 |
| 7. | பாலகர்களுக்கு ஒரு கதை - 36 | 17 |
| 8. | வேதபாடசாலையின் இன்றைய நிலை | 19 |
| 9. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 63 | 23 |
| 10. | ஸ்ரீ செம்பொன்செய்கோவில் மஹாஸம்ப்ரோக்ஷணம் | 25 |
| 11. | மஹாபாரத கதைகள் - -நளோபாக்யானம் - தொடர்ச்சி | 28 |
| 12. | செய்திகள் | 30 |
| 13. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : தேஷ் தாளம் : ஆதி

*பல்லவி*

***பாவ பக்திம் தேஹி மே ராதே***
***கோபீ பாவ பக்திம் தேஹி மே ராதே (பாவ)***

*சரணங்கள்*

***கோபீ ஜனானாம் அக்ரகண்யே***
***காமித பலதே கலாவதீஸ¬தே (பாவ)***

***ராஸ மண்டல ப்ரதானேஶ்வரி***
***ரஸிக பக்தஜன ஹ்ருதயேஶ்வரி (பாவ)***

***மதுமதி வீணா வாதன ப்ரியே***
***மதுரமுரளீதர ப்ரிய ஶ்ரியே (பாவ)***

முன் அட்டைப்படம் : கும்பகோணம் காவேரீ தீரத்தில் அமரேந்த்ர புரத்தில் உள்ள ஸ்ரீ ராமச்சந்த்ரதீர்த்தரின் அதிஷ்டானம்.

பின் அட்டைப்படம் : ஸமீபத்தில் மதுரபுரியில் நடைபெற்ற ப்ரஹ்மோத்ஸவத்தில் மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதன் ஹம்ஸவாஹனத்தில் எழுந்தருளுகிறார்.

மாத்வ ஸம்ப்ரதாயத்தில் ஸ்ரீ விஜயீந்த்ரர் என்ற மஹான் மிகவும் ப்ரஸித்தியாக இருந்தார். அவர் வ்யாஸராயர் பரம்பரையில் வந்த பீடத்தை அலங்கரித்து வந்தார். பெரும்பாலும் கும்பகோணத்திலேயே வாஸம் செய்து வந்தார். இவர் ஸ்ரீ ராகவேந்த்ர ஸ்வாமிகளின் குருவும் ஆவார். இன்றும் ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகளின் அதிஷ்டானம் கும்பகோணத்தில் உள்ளது. விஜயீந்த்ர ஸ்வாமிகள், 64 கலைகளிலும் நிபுணராக விளங்கினார். தன்னுடைய காலகட்டத்தில் பல அத்புதங்களை நிகழ்த்தியுள்ளார். அப்பய்யதீக்ஷிதரும் விஜயீந்த்ரரும் ஸமகாலம்.

விஜயீந்தரர், கும்பகோணத்தில் இருந்த காலத்தில், வடநாட்டிலிருந்து மத்வ ஸம்ப்ரதாயத்தை சேர்ந்த ஒரு பரிவ்ராஜக ஸன்யாஸி கும்பகோணத்திற்கு வந்தார். ஸ்ரீ ராமச்சந்த்ர தீர்த்தர் என்பதாக அவருடைய பெயர் தெரிய வருகின்றது. வட இந்தியாவை சேர்ந்த அவர் தன்னுடைய தியானத்தில் தனக்கு முடிவு தக்ஷிணாயணத்தில் வருவதை தெரிந்து கொண்டார். ஶாஸ்த்ரங்கள் எல்லாம் உத்தராயண காலத்தில் தேஹத்தை விடுவதையே விசேஷமாக கூறியிருப்பதால் என்ன செய்வது என்று விசாரிக்கையில், கும்பகோணம் பாஸ்கர க்ஷேத்ரமாக இருப்பதால் கும்பகோணம் க்ஷேத்திரத்திற்கு மட்டும் தக்ஷிணாயணம், உத்தராயணம் என்ற பாகுபாடுகள் இல்லை என்பதை தெரிந்துகொண்டார். ஆகவே, வடதேசத்திலிருந்து தென் தேசம் வந்து கும்பகோணத்தில் தங்கியிருந்தார்.

ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகளும் ராமச்சந்த்ரதீர்த்தரும் சேர்ந்து அடிக்கடி அளவளாவி கொள்வார்கள். இங்கு ராமச்சந்திரதீர்த்தர் காலையில் எழுந்து காவிரியில் ஸ்நானம் செய்து கிழக்கு முகமாக, தர்பாஸனம் போட்டு அமர்ந்துகொண்டு உபநிஷத் பாராயணம் செய்வார். தசாவதார ஸ்துதிகளை சொல்வார். அவருக்கு பகவானுடைய தசாவதார ஸ்துதிகளில் மிகவும் ஈடுபாடு. பிறகு விஜயீந்த்ரரும் அவருமாக சேர்ந்து செல்வார்கள். விஜயீந்த்ரர் மங்களாம்பிகை தர்சனத்திற்கு செல்வார். ராமச்சந்த்ரதீர்த்தர் வராஹ ஸ்வாமியின் கோயிலுக்குச் செல்வார். இவர் நரஸிஹ்ம உபாஸகர். இவரிடம் பகவானின் அருளால் பல ஆஶ்சர்யமான ஸித்திகள் கை கூடியிருந்தது.



அந்த ஸமயம், தஞ்சாவூரை ராஜ்ய பரிபாலனம் செய்து வந்த அமரேந்த்ரன் என்ற ராஜா இவருடைய மஹிமைகளை கேள்விப்பட்டு தம்முடைய அரசவைக்கு அழைத்தான். ராமச்சந்த்ரதீர்த்தரும் ராஜாவின் அழைப்பை ஏற்று அரசவைக்குச் சென்றார். ராஜா அவரை பரிக்ஷை செய்யும் விதமாக ஸிம்ஹம் போல கர்ஜிக்க சொன்னான். அதற்கு அவர் தான் அப்படி செய்ய வேண்டுமானால், அரண்மனையிலும் தஞ்சாவூரிலும் உள்ள எல்லா கர்ப்பிணி ஸ்திரீகளையும், யானைகளையும் சிதம்பரம் தாண்டி அனுப்பிவிடச் சொன்னார். ராஜாவும் அப்படியே செய்தான். ஆனால், பிறந்து சில தினங்களே ஆகியிருந்த ஒரு யானைக்குட்டியை மட்டும் ராஜா தன் அரண்மனையிலேயே வைத்திருந்தான்.

இவர் ஸிம்ம கர்ஜனை செய்ய ஆரம்பித்தவுடன், அந்த யானைக்குட்டி அரண்மனை மதில் சுவர்களை த்வம்ஸம் செய்துவிட்டது. பிறகு ராஜா, ராமச்சந்திரதீர்த்த ஸ்வாமிகளுக்கு பானகம் நிவேதனம் செய்து கற்பூரம் காட்டி அவரை ஶாந்தபடுத்தினான். தான் அவரை பரிக்ஷை செய்ததை நினைத்து ராஜா பயந்தான். அவரிடம் அபராத க்ஷமாபணம் கேட்டுகொண்டான். அவருக்கு தான் ஏதாவது ஸன்மானம் அளிக்க விரும்பி யாது வேண்டும் என்று வினவினான். பரம வைராக்யசாலியான அவர் ஒரு தர்பாசனம் வேண்டும் என்று கேட்டு வாங்கிக்கொண்டார்.

கும்பகோணத்தில் அவர் தங்கியுள்ள இடத்தில் அந்த ராஜா தன் பெயரால் அமரேந்த்ரபுரம் என்ற ஒரு அக்ரஹாரத்தை ஏற்படுத்தி அதில் அநேக மத்வர்களை குடி வைத்தான். இரண்டு ராஜ சிப்பாய்களை கொண்டு அவருக்கு எப்பொழுதும் சாமரம் போடுவதற்கு ஏற்பாடு செய்தான். ஒவ்வொரு வியாழக்கிழமையும் ஒரு அழகான மலர்கிரீடம் எடுத்து வருவான். அதை மடியாக உள்ள ஸ்வாமிகளின் சிஷ்யர்கள் ஸ்வாமிகளின் சிரசில் வைத்து அலங்கரிப்பார்கள். நித்ய உபவாஸியான அவர் தசமி அன்றும் துவாதஶீ அன்றும் பாலும் வாழைப்பழமும் மட்டும் சாப்பிடுவார். அதைப் பார்ப்பதற்கு அநேக ஜனங்கள் அங்கு கூடுவதுண்டு.

ஸ்ரீ ராமச்சந்த்ரதீர்த்தர் அங்குள்ளவர்களுக்கு பகவத்குணம் சொல்லுகையில் கர்ப்பிணி ஸ்த்ரீகளை முதலில் அமர்த்திக்கொள்வார். அந்த கர்ப்பத்தில் இருக்கும் குழந்தைகள் ஸத்விஷயத்தை நன்றாக கிரஹித்து கொள்ளமுடியும் என்பதாலேயே அப்படி முன்வரிசையில் அமரச் செய்வார். இவர் ப்ரஹ்மாவின் மானஸ புத்ரரான ஸனகரின் அம்ஶமாக அவதாரம் செய்தவர். இவருடைய அதிஷ்டானம் இன்றும்

கும்பகோணத்தில் காவேரிக்கரையில் அமரேந்த்ரபுர அக்ரஹாரத்தின் எல்லையில் உள்ளது. மிகவும் ஸாந்நித்யமாக விளங்குகின்றது. அந்த அதிஷ்டானத்தில், பக்கத்தில் ஒரு சிவன் ஸன்னதியும், வரதராஜ பெருமாளின் ஸன்னதியும், கணபதியின் ஸன்னதியும் உள்ளது.

இந்த அதிஷ்டானத்தின் அடியில் ஶ்ரீ ராமச்சந்த்ர தீர்த்தர் இன்றும் தேவர்களுடன் சேர்ந்து நரஸிம்ம ஜயந்தியை கர்போத்ஸவமாக 10 நாட்களுக்கு கொண்டாடி வருகின்றார்கள். முஸ்லீம்கள் இந்து ஆலயங்களையும் தேவதா மூர்த்திகளையும் சின்னபின்னமாக்கி வந்த காலத்தில் தெற்கு திசையில் உள்ள தேவாலயங்களில் உள்ள மூர்த்திகள் எதற்கும் ஆபத்து வரக்கூடாது என்று ப்ரஹ்மா நெல்லிக்காய்களை மூட்டையாக கட்டி இங்கு உள்ள மஹாகணபதியை பூஜை செய்தார் என்பது ஐதிகம். மேற்படி விஷயங்கள் யாவும் கும்பகோணம் அம்மாளு அம்மாவின் கீர்த்தனைகளில் வந்துள்ளன.

ஸமீபத்தில் கும்பகோணம் சென்ற நம் ஸ்வாமிகள் இந்த அதிஷ்டானத்திற்கு சென்று தர்சனம் செய்து பூஜை செய்து வந்தார்கள். அவ்வமயம், அம்மாளு அம்மா அவர்களும் அதிஷ்டானத்திற்கு வந்திருந்தார்கள். அப்பொழுதும் அந்த யதீஶ்வரர் மீது மிக அத்புதமான கீர்த்தனை ஒன்று கவளம் ஆகியது அம்மாளு அம்மாவிற்கு. மிக விரைவில் மேற்படி ஆலயங்களுக்கும் அதிஷ்டானத்திற்கும் ஜீர்ணோத்தாரணம் செய்ய நம் ஸ்வாமிகள் உத்தேஸித்துள்ளார்கள்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

---

நாம் பகவானை அடைவதற்காக ஜபமோ, தியானமோ செய்ய ஆரம்பிக்கும்பொழுது, நாம் இனிமேல் எப்பொழுது ஜபம் செய்து, தியானம் செய்து பகவானை காணப்போகின்றோம் என்று ஒரு தளர்ச்சி ஏற்படும். ஆனால், அப்பொழுதெல்லாம் ஒவ்வொரு மஹாத்மாவும் தங்களுடைய ஸாதனைகளை இப்படித்தானே ஆரம்பித்திருப்பார்கள் என்று நினைத்து உற்சாகமாக ஸாதனைகளை தொடர்ந்து செய்து வரவேண்டும்.

**- ஶ்ரீ ஸ்வாமிகள்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிகளின் பதில்கள்

***கேள்வி : நான் ஜபம் செய்து வரட்டுமா? அல்லது ஆத்மவிசாரம் செய்து வரலாமா?***

ஸ்ரீ ஸ்வாமிகள் : தாங்கள் ஜபமே செய்து வரலாம்.

***கேள்வி : ஆனால், பகவான் ரமண மஹரிஷிகள், ஆத்மவிசாரம் செய்வது மிகவும் சுலபமானது என்று கூறுகின்றார். அப்படி இருக்கையில், நான் ஏன் ஆத்மவிசாரம் செய்யக்கூடாது? என்னை ஏன் ஜபம் செய்து வரச்சொல்கின்றீர்கள்.***

பதில் : ரமண மஹரிஷிகள் தங்களைப் போல் ஒவ்வொருவரிடமும் சென்று நான் ஜபம் செய்து வரலாமா? விசாரம் செய்து வரலாமா? என்று விசாரிக்கவில்லையே? உங்களுடைய பக்குவத்திற்கு தாங்கள் ஜபம் செய்து வருவதே நல்லது.

***கேள்வி : மனோநாசம் என்பதுதான் மிகவும் அவச்யம். அதுதான் வேதாந்த மதத்தின் லக்ஷ்யம் என்று கூறுகின்றார்கள். அதே ஸமயம், அது அவ்வளவு சுலபமில்லை என்றும் கூறுகின்றார்கள். அப்படியிருக்கையில் கேவலம் நாம ஜபத்தினால் மட்டும் மனது எப்படி நாசமாகும்?***

பதில் : ஒரு பெரிய மரம் இருக்கின்றது. அந்த மரத்தை வெட்டி சாய்க்க நினைத்தால், பல பேர் கோடாளி, ரம்பம், அரிவாளுடன் பல நாட்கள் உழைத்து சிரமப்பட்டு வெட்டித் தள்ள வேண்டியிருக்கின்றது. ஆனால் அளவில் மிகவும் சிறியதாக உள்ள கரையான்கள் ஆயிரக்கணக்கில் சேர்ந்து அந்த மரத்தை சுலபமாக அரித்து தள்ளிவிடுகின்றது. அதுபோல், பகவானுடைய நாமாக்கள் என்பது கரையான் போன்றது. நாமாவை ஆயிரக்கணக்கில் ஜபம் செய்து வருவதால் சுலபமாக மனம் அழிந்துவிடும்.

### *கேள்வி : பக்தி வழியில் செல்லும் எனக்கு தாங்கள் சொல்ல விரும்புவது என்ன?*

பதில் : பக்தி என்ற பெயரில் சோம்பேறியாகவோ, கோழையாகவோ, தன்னம்பிக்கையை இழந்தவராகவோ ஆகிவிடக்கூடாது என்பது தான் நான் சொல்ல விழைவது.

### *கேள்வி : ஸாத்வீக புராணங்கள் எவை எவை என்று கூறப்பட்டுள்ளன?*

பதில் : விஷ்ணு புராணம், நாரத புராணம், ஸ்ரீமத் பாகவதம், கருட புராணம், பத்ம புராணம், வராஹ புராணம் போன்றவைகளை ஸாத்வீக புராணங்களாக பத்மபுராணம் கூறுகின்றது.

### *கேள்வி : கவிகள் செய்துள்ள ராமச்சரித்ரங்களையோ பாகவத புராணங்களையோ படிப்பதால் புண்யம் ஏற்படுமா?*

பதில் : பகவானுடைய சரித்ரங்களைப் படிப்பது என்பது விசேஷம்தான். ஆனால் மஹரிஷிகள், பக்தர்கள் செய்த க்ரந்தங்களைப் படிப்பதுதான் மிகவும் நல்ல பலனைத் தரும்.

### *கேள்வி : உபவாஸத்தால் என்ன பலன்?*

பதில் : இந்திரியங்கள் பலம் இழக்கும். ஆகவே இந்திரியங்கள் விஷயங்களில் மனது செல்ல முடியாததனால் சுலபத்தில் மனது ஒருமுகப்படும்.

### *கேள்வி : மனதை அடக்குவதால் எப்படி நாம் ப்ரஹ்மஸ்வரூபமாக ஆகமுடியும்?*

பதில் : ஒரு இடத்தில் நதியானது உற்பத்தி ஆகி ஸமுத்ரத்தை நோக்கி பெருகி ஓடிக்கொண்டே இருக்கின்றது. நதி உற்பத்தி ஆன நாள் முதல் ஸமுத்ரத்தை நோக்கி ஓடாமல், உற்பத்தி ஆன இடத்திலேயே இருந்து விட்டால் அதுவே ஸமுத்ரமாகிவிடும் அல்லவா. அதுபோல், மனதை உற்பத்தி ஸ்தானத்திலேயே இருக்கச் செய்தால், நாமும் ப்ரஹ்மமாகி விடுவோம் என்கின்றார் சங்கரர்.

### *கேள்வி : சாளக்ராமத்திற்கு ஆவாஹனம் அல்லது ப்ராண ப்ரதிஷ்டை போன்றவைகள் தேவையில்லையா?*

பதில் : நைமிஷம் எனும் வனம், புஷ்கரம் எனும் தீர்த்தம், கோவர்த்தனம் எனும் பர்வதம், சாளக்ராமம் இவைகள் ஸ்வயம் பகவத் ஸ்வரூபங்களென்று

சொல்லப்பட்டுள்ளது. ஆகவே, சாளக்ராமத்திற்கு ஆவாஹனமோ, ப்ராண ப்ரதிஷ்டையோ தேவையில்லை.

***கேள்வி : மனுஸ்ம்ருதியை படித்துப் பார்த்தால் அதில் ஜாதிக்கு ஒரு நீதி இருக்கின்றதே! இது எந்த ரீதியில் நியாயம்?***

ஸ்ரீ ஸ்வாமிகள் : இப்பொழுதும் கூட கல்லூரிகளில் சேர்ப்பது, வேலை வாய்ப்பு அளிப்பது, ப்ரமோஷன் அளிப்பது போன்றவற்றில் ஜாதிக்கு ஒரு நீதி உள்ளதே. இது சரி என்றால் அதுவும் சரியே!

***கேள்வி : பிற்படுத்தப்பட்டவரை முன்னேற்றுவதற்காக அரசாங்கம் இப்பொழுது கொடுக்கும் சலுகைகள் நியாயமானதே. இதற்குத் தகுந்த காரணம் உள்ளதே!***

ஸ்ரீ ஸ்வாமிகள் : அப்படியாயின் அந்த காலத்தில் அவர்கள் சில சலுகைகள் கொடுத்ததற்கும் ஏதாவது ஒரு காரணம் இருந்திருக்கலாம் அல்லவா!

---

தன்னுடைய ஆஶ்ரமத்திற்குரிய கடமைகளைச் செய்தல், தினந்தோறும் ஸ்ரீ க்ருஷ்ணனுடைய விக்ரஹத்திற்கு அர்ச்சனை செய்து ஸந்தோஷமுறுதல், அடிக்கடி விஷ்ணு பக்தர்களைச் ஸந்தித்து அவர்களுக்கு உபசாரம் செய்தல், ஸ்ரீ க்ருஷ்ண கதைகளைக் கேட்பதில் மிகச் ஸந்தோஷமுறுதல், உண்மையே பேசுதல், பிறர் மனைவி, பிறர் பொருள்களிலும், பிறநிந்தையிலும் விருப்பமின்மை, உலக வியவகாரங்களில் அஞ்சுதல், புண்ணிய தீர்த்தங்களுக்குச் செல்ல விருப்பம், மதுநாயகனாகிய ஸ்ரீ க்ருஷ்ணனுடைய கதைக்குத் தடை நேர்ந்தால் ஆயுள் வீணாயிற்று என்ற தாபம் ஆகிய இவைகள் ஏற்படுகையில் பக்தி நிலைத்து, ஸ்ரீ கிருஷ்ணகதையைக் கேட்டதினால் ஸூக்ஷ்மபக்தி உண்டாகிறது. அந்த ஸூக்ஷ்மபக்தி உண்டானால் 'ஹரி' ஹ்ருதயத்தில் வாஸம் செய்கிறார்.

**- ப்ரோபதஸுதாகரத்தில்**
**ஸ்ரீ ஆதிசங்கரர்**

# வேத கதைகள் - 42

**- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி**
**ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்**

## குருவின் கருணை

ப்ரஸித்தர்களான வஸு முதலிய தேவர்களும் விஶ்வாமித்ரர் முதலிய மஹரிஷிகளும் மனதில் ஒரு எண்ணம் கொண்டனர். யாவரும் ஒரே விதமான யாகத்தை நீண்ட காலம் தொடர்ச்சியாக அனுஷ்டானம் செய்வோம் என்று எண்ணம்கொண்டு தீர்மானமும் செய்தனர். பிறகு அவ்விருவர்களும் எல்லா தினங்களிலும் ஒரே விதமான யாகத்தை செய்வதற்காக ஒரே விதமான மந்திரத்தை கண்டுபிடிக்க யத்தனித்தனர்.

யாகங்கள் பலவிதமாக செய்யப்படுகின்றன. தேவதைகளும் வெவ்வேறாக இருக்கின்றன. மந்த்ரங்களும் பலவிதமாக இருக்கின்றன. ஆதலால் தேவர்கள், ரிஷிகள் இருவரும் சேர்ந்து ஒரே விதமான யாகம், ஒரே தேவதை, மந்த்ர ஸமூகமும் ஒரே விதமாக இருக்கவேண்டும் என்று தீர்மானித்து, அவ்விதமே தங்களுடைய யோக சக்தியால் கண்டுபிடித்து யாகம் செய்தனர். எவ்விதம் ஒரு பூனை முன் தினங்களில் எந்த வீடுகளில் ஸஞ்சரிக்கிறதோ அதே வீடுகளில் மறு தினங்களிலும் நடமாடுகிறதோ, அதுபோல் தேவர்களாலும் ரிஷிகளாலும், பல தினங்களில் ஒரே விதமாக செய்யப்படுகின்ற யாகங்களில் இந்திரனே தேவதையாக இருந்தான். மந்த்ரங்களும் ஒரே விதமாக இருந்தன. இவ்விதம் வேறுபாடு இல்லாமல் ஒற்றுமையுடன் ஒரே விதமாக செய்தனர்.

இந்த யாகத்திற்காக ஸம்பாதம் என்ற ஸூக்தங்களை விஶ்வாமித்ரர் என்ற மஹரிஷியானவர் ஸ்ருஷ்டியின் ஆரம்பத்தில் பகவானுடைய அனுக்ரஹத்தால் கண்டுபிடித்தார். விஶ்வாமித்ரரால் கண்டுபிடிக்கப்பட்ட ஸம்பாதம் என்ற ஸூக்தங்களை தான் அத்யயனம் செய்து இந்த ஸூக்தத்தை தானே கண்டுபிடித்ததாக வாமதேவர் என்ற மஹரிஷியானவர் உலகில் வெளிப்படுத்தினார். இந்த ஸூக்தங்களை வாமதேவர் சீக்கிரமாக பரப்பினார். தாமதித்தால் விஶ்வாமித்ரர் வந்து தன்னால் கண்டுப்பிடிக்கப்பட்டது என்று வெளிப்படுத்திவிடுவாரோ என்ற பயத்தால் இந்த ஸூக்தங்களை பல ஶிஷ்யர்களுக்கு விரைவாக சொல்லிக்கொடுத்தார்.

இவ்விதம் மோசடி செய்த வாமதேவரைக் குறித்து அந்த விஶ்வாமித்ரர் ஆலோசிக்கலானார். எந்த ஸம்பாதம் என்ற மந்த்ரத்தை ஈஶ்வர க்ருபையால் விஶ்வாமித்ரர் கண்டுபிடித்தாரோ அந்த மந்த்ரங்களை குரு த்ரோஹம் செய்கிறோம் என்ற பயமில்லாமல் தன்னால் கண்டுபிடிக்கப்பட்டது என்று வாமதேவர் வெளிப்படுத்திவிட்டார். ஆதலால் மறுபடியும் சில மந்த்ரங்களைக் கண்டுபிடித்து இந்த மந்த்ரங்கள் விஶ்வாமித்ரரால்தான் கண்டுபிடிக்கப்பட்டது என்று உலகம் அறிய வேண்டும் என்று தீர்மானித்தார். இந்த வரலாற்றிலிருந்து, வாமதேவர் விஶ்வாமித்ரருடைய ஶிஷ்யர் என்று தெரியப்படுகிறது.

ஶிஷ்யனான வாமதேவரிடத்தில் உள்ள தயையாலும் ''ஶிஷ்ய ப்ரஸித்தி: யசஸே குரூணாம்'' என்ற ந்யாயப்படி வாமதேவருக்கு புகழெல்லாம் குருவிற்கு பெருமையைத்தான் சேர்க்கும் என்ற காரணத்தாலும் விச்வாமித்ரர் வாமதேவர் இடத்தில் கோபம் கொள்ளவில்லை. இவ்விதம் தீர்மானித்து விஶ்வாமித்ரர் ஈஶ்வர அனுகிரஹத்தால் பல ஸூக்தங்களை கண்டு பிடித்தார். அந்த ஸூக்தங்களுக்கு விஶ்வாமித்ரர்தான் ரிஷி என்று ப்ரஸித்தி ஏற்பட்டது. இந்த வரலாற்றினால் ஒருத்தரால் கண்டுபிடிக்கப்பட்ட மந்த்ரங்களை தான் கண்டுபிடித்தேன் என்று உலகிற்கு அறிவிப்பது, ஶிஷ்யன் தனக்கு த்ரோஹம் செய்தாலும் கருணையால் ஶிஷ்யனை மன்னித்துவிடுவது முதலிய பல விஷயங்கள் நமக்கு நன்கு புலப்படுகின்றன.

---

யாத்திரை செய்கிறவன் வழியில் உணவிற்காக அன்னத்தை மூட்டையாகக் கட்டிக்கொண்டு போகிறான். சுமந்து செல்லுகையில் பாரமாகயிருக்கிறது. ஆகையால், கைகளிலும் தோள்களிலும் அடிக்கடி மாற்றிக்கொள்ளுகிறான். மற்றவர்கள் அதை கைப்பற்றாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாகிறது. கீழே வைத்தால் நாய் முதலிய பிராணிகள் தொட்டுவிடும் என்று அஞ்சுகிறான். அந்த உணவுப் பொருள் மூட்டையிலிருக்கையில் தனக்கு பசியும் உண்டாகிறது. அதைச் சாப்பிட்டுவிட்டால் இந்த வருத்தங்கள் யாவும் நீங்கிவிடுகின்றன. அதுபோல், பரமாத்மாவை த்வைதமாக உபாசிக்கின்ற வரையிலும் துக்கம் உண்டு. அத்வைத நிலையில்த ான் ஶாந்தி உண்டாகின்றது.

- **ஆதிசங்கரர்**

# ஶ்ராத்தம் செய்யும் ஆராவமுதன்

கும்பகோணம் என்ற க்ஷேத்ரம் காவிரிநதிதீரத்தில் உள்ளது. அங்கு கோவில் கொண்டிருக்கும் எம்பெருமானுக்கு ஶார்ங்கபாணி என்பது திருநாமம். அந்த ஊரில் நான்காம் வருணத்தைச் சேர்ந்த நாராயணதாஸர் என்ற மஹாத்மா வசித்து வந்தார். அவர் எப்பொழுதும் ஹரி நாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டும், பெருமாளுக்கு புஷ்ப கைங்கர்யம் செய்துகொண்டும் இருந்தார். ஶார்ங்கபாணியிடம் அவருக்கு வாத்ஸல்ய **பா**வபக்தி இருந்தது. அதாவது பெருமாளை எப்பொழுதும் தன்னுடைய குழந்தையாகவே நினைத்து பக்தி செய்வார். அவர் பெரிய தனிகராக இருந்த போதிலும், தனக்கு என்று எந்த வாரிசையும் ஏற்படுத்திக் கொள்ளாமல் தன்னுடைய செல்வம் முழுவதையும் ஶார்ங்கபாணியின் கைங்கர்யத்துக்கும் வைஷ்ணவர்களின் ததீயாராதனைக்குமே செலவு செய்தார். எப்பொழுதும் எம்பெருமானுடைய கோவிலையே வளைய வருவார். தன்னுடைய சொத்துக்கள் எல்லாம் செலவழிந்த பின்னும் கோவில் ப்ரஸாதத்தையே சாப்பிட்டு எம்பெருமானுக்குத் தொண்டு செய்துவந்தார்.

ஒரு தீபாவளி அமாவாஸையன்று அவர் பரமபதம் அடைந்தார். அவர் அப்பொழுது ஏழையாக இருந்ததாலும் நான்காம் வருணத்தை சேர்ந்தவராக இருந்ததாலும் அவருக்கு ஸம்ஸ்காரம் செய்ய யாரும் முன்வரவில்லை. அவருடைய ஶரீரமானது அநாதைப்பிணமாகக் கிடந்தது. அப்படி இருக்கையில் எங்கிருந்தோ திடீரென்று ஒரு வைஷ்ணவப் பையன் அங்குத் தோன்றி நாராயணதாஸனார் தனக்கு தகப்பனார் என்று கூறி ஸம்ஸ்காரங்களை யதோக்தமாக செய்துவிட்டுச் சென்றுவிட்டான். அங்கு இருந்தவர்களுக்கு அந்த பையன் யார் என்ற விபரம் தெரியவில்லை. அன்றிரவு பல பக்தர்களின் கனவில் ஆராவமுதன் தோன்றி தன்னுடைய நிஜபக்தனும் அபிமான தந்தையுமான நாராயணதாஸருக்கு தானே வைஷ்ணவச் சிறுவன் ரூபத்தில் வந்து ஸமஸ்காரங்களைச் செய்ததாக கூறினார். மேலும் ஒவ்வொருவரிடமும் அந்தத் தீபாவளி அமாவாசை திதியில் தன்னுடைய அபிமான பிதாவின் பொருட்டு ப்ரதிவருடமும், ஶ்ராத்தமும், அர்ச்சகமுகேந செய்யகடவன் என்றும் தெரிவித்தார். இன்றும் எம்பெருமான் தீபாவளி அமாவாசையன்று அர்ச்சகமுகேந ஶ்ராத்தம் செய்து வருகின்றான்.

# எந்தரோ மஹானுபாவுலு - 30

நிமாயி மிகப்பெரிய பண்டிதனாகவும், குணவானாகவும், ரூபவானாகவும், தேஜஸுடையவனாகவும் திகழ்ந்த போதிலும், தனவந்தனாக இருக்கவில்லை. தரித்ர நிலைமை, நிமாயியை சிறிதும் பாதிக்கவில்லை. அவன் மிகவும் ப்ரஸன்னமான மனோ**பா**வத்துடன் வாழ்ந்து வந்தான்.

அந்த நாட்களில் பண்டிதர்கள் தனது யோக்யமான சீடர்களுடன் வெளியூர்களுக்கு விஜயம் செய்வதுண்டு. அங்கங்கே க்ரஹஸ்தர்கள் பண்டிதர்களையும் அவர்களது சீடர்களையும் அழைத்து அன்ன வஸ்த்ரம் அளித்து தன உதவி செய்வது வழக்கம். நிமாயிக்கும் கிழக்கு வங்காள தேசத்திற்கு சுற்றுப் பயணம் செய்யவேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. தனது தாயிடம் அனுமதி பெற்று தனது சிறந்த சீடர்களுடன் நிமாயி வங்காள தேச யாத்திரைக்கு புறப்பட்டான். தனது மனைவி லக்ஷ்மி தேவியை அவளது பிதாவின் க்ருஹத்தில் விட்டுவிட்டு கங்கையைத் தாண்டி ராடதேசத்திற்குள் ப்ரவேசித்தான்.

வங்காளத்தில் பாகீரதிக்கு இரு கிளைகள் உண்டு. மூலகிளை கிழக்கு முகமாகச் சென்று வங்காள கடலில் கலக்கும். இதற்கு பத்மாவதீ என்று பெயர். மற்றொன்று நவத்வீபம் வழியாகச் சென்று கங்கையில் கலந்து பிறகு ஸமுத்திரத்தில் கலக்கும். இதற்கு பாகீரதி எனப் பெயர். ப்ரஹ்மபுத்ரா நதியின் தக்ஷிண கரையிலிருந்து பத்மா நதி பர்யந்தம் உள்ள தேசத்திற்கு ராடதேசம் எனப்பெயர். வடக்குக்கரை ப்ரதேசத்தை கௌடதேசம் என அழைப்பார்கள். இரு ப்ரதேச மக்களின் ஆசார விசாரங்களும் வித்தியாசமாக இருக்கும்.

நிமாயியின் புகழ் எங்கும் பரவி இருந்ததால் அவனது வரவை ராடதேசத்தில் அனைவரும் ஆர்வமுடன் எதிர்பார்த்தனர். அங்குள்ள வித்யார்த்திகளும் நிமாயியை அடைந்து, ''தங்களது வரவால் எங்கள் தேசம் பாவனமாயிற்று. உங்களது பாண்டித்யத்திற்கு ஈடுஇணை உண்டா? உங்களது வ்யாகரண க்ரந்தம் மிகவும் உயர்வாக உள்ளது. எங்களுக்கு படிப்பதற்கு மிகவும் பயன்படுகிறது'' என்று வெகுவாக அவரைப் புகழ்ந்தனர்.

நிமாயியுடன் சென்றவர்களுக்கு உள்ளூர ஒரு பயம் இருந்தது. நிமாயி ஸஞ்சலமான ஸ்வபாவம் உள்ளவனாயிற்றே. பண்டிதர்களிடம் குதர்க்கமாக வினாக்கள் எழுப்பாமல் இருக்கவேண்டுமே என்று சற்று கவலையுடன் இருந்தனர். ஆனால் நிமாயி, தனது பொறுப்பை உணர்ந்து கால தேச வர்த்தமான நிலைக்கேற்ப மிகவும் கம்பீரமாகவும் பெரிய வித்வானாகவும் பழகினான். வைஷ்ணவர்களிடம் கேள்விகள் எழுப்பாமல் பகவத் பக்தியை ப்ரசாரம் செய்தான். மக்கள் கேள்வி கேட்டால் மிக அழகாக, பகவன்நாம மஹாத்மியத்தை எடுத்துரைத்தான். பக்தியின் ஸ்ரேஷ்டத்தை ஸ்தாபித்து கலியுகத்தில் பக்திமார்க்கம்தான் மிகவும் உயர்ந்தது; ஸுலபம்; ஸர்வ உபயோகமானது என்று பதிலளித்தான். ஶாஸ்த்ர உதாஹரணங்களை எடுத்துக்கூறி யாவருக்கும் பக்தி ரஸத்தை ஊட்டினான். ராடதேசத்து முக்ய ஸ்தானங்களுக்கு விஜயம் செய்தான். மாலையில் தனது தோழர்களுடனும், சீடர்களுடனும் பத்மாவதீ நதியில் ஸ்நாநம் செய்து மணிக்கணக்கில் ஏகாந்தத்தில் நதியில் நீராடி மகிழ்வான். அங்கங்கு நிமாயிக்கு போஜன வசதிக்கான தான்யங்களை அளித்துவிடுவார்கள், உடன்வந்தவர்கள் போஜனம் தயார் செய்வார்கள். இப்படி யாத்திரை ஆனந்தமாக கழிந்தது.

ஒருநாள் நிமாயி பண்டிதர் ஏகாந்தமாக அமர்ந்து இருக்கும் ஸமயத்தில் ஒரு தேஜஸ்வியான ப்ராஹ்மணர் நிமாயியின் அருகில் வந்தார். அவரது வினயமும் தேஜஸும் அவர் நிமாயி ப்ரபுவை அடைய மிகுந்த ஆர்வத்துடன் வந்திருந்ததை வெளிப்படுத்தியது. ப்ராஹ்மணர் எந்நேரமும் பகவன்நாமாவை உச்சாரணம் செய்துகொண்டிருந்தார். நிமாயியை அடைந்ததுமே அவர் நிமாயியின் சரணங்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தார். நிமாயி அவரை மெதுவாக எழுப்பி ஆரத்தழுவிக்கொண்டு தனது கோமளமான கரத்தால் அவரை வருடிக்கொண்டே, ''நீங்கள் பூஜ்யர் அல்லவா? ஏன் இப்படி பாலகனான என்னிடம் நடந்து கொள்கிறீர்கள்?'' என வினவினார்.

ப்ராஹ்மணரோ நிரந்தரமாக நிமாயியின் சரணங்களைப் பிடித்துக் கொண்டு அழுதுகொண்டே இருந்தார். நிமாயி கூறியது எதையும் கேட்கவே இல்லை.

நிமாயி மறுபடியும் அவரை ஸமாதானப்படுத்தி, ''இப்படி ஏன் அழுகிறீர்கள்? முதலில் உங்களது ஸங்கடம் என்ன என்று சொல்லுங்கள். மங்களமான பகவான் உங்களுக்கு நல்லதே செய்வான். உங்களுக்கு என்ன துக்கம் என்று கூறுங்கள்'' என்றான்.

ப்ராஹ்மணர் கூறலானார். ''ப்ரபோ! நான் மிகவும் அதமன். ஒரு ஸாதனையும் செய்யாதவன். இன்று வரை இந்த பூமியில் ஒரு மனிதன் அடையவேண்டியது என்ன, அதை அடைவதற்கு செய்யவேண்டியது என்ன என்பதெல்லாம் தெரிந்துகொள்ளாதவன். பகவானை எப்படி துதிக்க வேண்டும், என்ன ப்ரார்த்தனை செய்யவேண்டும் என்பதெல்லாம் தெரியாதவன். ஆண்டவனிடம் நீங்களே எனக்கு உங்களை எப்படி அழைக்கவேண்டும் என்றும் நான் அடையவேண்டியது என்ன என்பதையும் தெரியப்படுத்தவேணடும் என்று மட்டும் கேட்பேன். அந்தர்யாமியான பகவான் என் ப்ரார்த்தனைக்கு செவி சாய்த்துவிட்டார்.

நேற்று இரவு என் கனவில் ஒரு மஹாபுருஷர் தோன்றி, ''தற்சமயம் கிழக்கு வங்காளத்தில் யாத்திரை செய்யும் நிமாயி பண்டிதரை ஸாதாரண பண்டிதன் என்று எண்ணாதே. அவன் ஸாக்ஷாத் நாராயண ஸ்வரூபன். அவனை அடைந்து ஸாதனை, ஸாத்யம் ஆகியவை பற்றி அறிந்து கொள்'' என்று கூறி மறைந்தார். கண் விழித்து நான் நேரே உங்களைத் தேடி ஓடிவந்துள்ளேன். இன்று என் ஜன்மம் ஸபலம் அடைந்துள்ளது. தங்களது ஸ்ரீ சரணங்களை தர்சனம் செய்து நான் க்ருதக்ருத்யனானேன்'' என்றார்.

இதைக் கேட்டு நிமாயி புன்னகைத்துக் கொண்டே, ''மஹாபாக்யவானான உங்கள் மீது ஸ்ரீ க்ருஷ்ணனின் பரிபூர்ண க்ருபை நிரம்பி உள்ளது. உங்களது அந்தராத்மா மிகவும் பவித்ரமானதால் நீங்கள் அனைவரிடமும் பகவானைக் காண்கிறீர்கள். இதனாலேயே உங்களுக்கு திவ்ய ஸ்வப்னம் ஏற்பட்டுள்ளது. நீங்கள் இந்த விஷயத்தை ஸத்யமாக எண்ணுங்கள். யாரிடமும் இது பற்றி கூற வேண்டாம்'' என்று பதில் சொன்னார். தபன் மிச்ரா என்ற அந்த ப்ராஹ்மணர், ''ப்ரபோ! நீங்கள் என்னை மறக்கக்கூடாது. நான் தங்களது பவித்ர சரணங்களில் ஸர்வ**பா**வத்துடன் ஶரணாகதி அடைந்துள்ளேன். என்னை ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்று கெஞ்சினார்.

ப்ரபு சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு ''விப்ர ஶ்ரேஷ்டரே! பகவானை அடைவதுதான் மனித ஜன்மத்திற்கு லக்ஷ்யம். ஒவ்வொரு யுகத்திலும் இதற்கு தனித்தனி வழிகள் உள்ளன. ஸத்ய யுகத்தில் த்யானமும், த்ரேதாயுகத்தில் பெரிய பெரிய யஜ்ஞங்களும், த்வாபர யுகத்தில் பகவானை அர்ச்சனை செய்வதும், பகவானை அடைவிக்கும் மார்க்கங்களாக இருந்தன. ஆனால் இந்த கலியுகத்திலோ,

பகவானை அடைய கேவலம் கேசவ கீர்த்தனம் ஒன்றுதான் ஸர்வஶ்ரேஷ்டமான ஸாதனம்.

*''ஹரேர் நாம ஹரேர் நாம ஹரேர் நாமைவ கேவலம் ।*
*கலௌ நாஸ்த்யேவ நாஸ்த்யேவ நாஸ்த்யேவ கதிர் அன்யதா ॥*

என்று கூறினார். பிறகு மேலும் சொன்னார்.

*ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥*

''இந்த பதினாறு நாமங்களும் முப்பத்திரண்டு அக்ஷரங்களும் கொண்ட மந்த்ரம் தான் முக்கிய ஸாதனம். அடையவேண்டியது என்ன என்ற குழப்பத்தை விடுங்கள். இந்த மந்த்ரத்தை ஜபித்துக்கொண்டே இருங்கள். அடையவேண்டியது தானாகவே வந்தடையும் என்றதும் மிச்ராஜி பேரானந்தம் அடைந்தார். அவரது கண்களில் நீர் பெருகியது. ''உங்களது பெருங்கருணையால் எனது ஸம்ஶயங்களை நீக்கி எனக்கு நல்வழி காட்டினீர்கள். இனி உங்களது சரணங்களை விட்டு அகலாத ஸமீபத்தைக் கொடுத்து அருளவேண்டும்'' எனக் கேட்டுக்கொண்டார்.

நிமாயி, ''நீங்கள் காசிக்கு சென்று வாழ்ந்து கொண்டிருங்கள். காலாந்திரத்தில் நான் காசிக்கு வருவேன். அங்கு நாம் சந்திக்கலாம். நீங்கள் அந்த சிவபுரியில்தான் வாழவேண்டும்'' என்று சொன்னதும் அவரது ஆணையை சிரமேற்கொண்டு தபன்மிச்ரா காசிக்குச் சென்றார். நிமாயியும் நவத்வீபத்திற்கு திரும்பிச் செல்ல ஏற்பாடுகளைச் செய்தான்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

---

ஒருவன் நீரில் இறங்க வேண்டுமானால் நீச்சல் தெரிந்திருக்க வேண்டும். ஆனால், அந்த நீச்சலையோ நீரில் இறங்கித்தான் பழகிக்கொள்ள வேண்டும். காமம், கோபம், பயம் போன்ற வாசனைகள் பக்தியினால்தான் அழியும். ஆனால் பக்தி ஸித்திப்பதற்கே முடிந்தவரை காம, கோப, பயவசப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

# பாலகர்களுக்கு ஒரு கதை - 36

ஸ்ரீதர ஐயாவாள் என்ற மஹாத்மா கும்பகோணத்தில் அருகாமையில் உள்ள திருவிசநல்லூர் என்ற க்ஷேத்ரத்தில் வாழ்ந்து வந்தார். அவர் தினந்தோறும் திருவிசநல்லூர் அருகில் உள்ள திருவிடைமருதூர் என்னும் மத்யார்ஜுன க்ஷேத்ரத்திற்குச் சென்று மஹாலிங்கஸ்வாமியைத் தரிசித்து வருவது வழக்கம். ஒவ்வொரு நாளும் கோவிலை மூடும் பொழுது நடைபெறும் அர்த்தஜாமபூஜையை தர்ஶனம் செய்ய அவர் செல்வது வழக்கம். எத்தனை இடையூறு ஏற்பட்டாலும் அவர் திருவிடைமருதூர் சென்று மஹாலிங்கஸ்வாமியை தர்ஶனம் செய்யாமல் இருக்கமாட்டார். ஒருநாள், வழக்கம்போல ஸ்ரீதர ஐயவாள், அன்றும் திருவிடைமருதூர் கிளம்பினார். திருவிசநல்லூரிலிருந்து திருவிடைமருதூர் செல்வதாயிருந்தார்.

அந்தக் காலத்தில் எல்லாம் காவேரியை கடந்துதான் செல்லவேண்டும். ஆனால், தொடர்ந்து பெய்து வந்த மழையினால் காவேரியில் வெள்ளம் புரண்டு ஓடியது. படகுகாரர்கள் யாரும் வெள்ளத்தில் படகு ஓட்ட முடியாததால் அவரவர்கள் வீட்டிற்கு சென்றுவிட்டனர். மழையோ நன்றாகக் கொட்டுகின்றது. அத்தகைய நிலையிலும் ஶிவதர்ஶனம் செய்யாமல் வீடு திரும்ப அவருக்கு மனது வரவில்லை. அக்கரையில் நின்றுகொண்டே திருவிடைமருதூர் மஹாலிங்கஸ்வாமியின் கோபுரத்தைப் பார்த்துக்கொண்டே, மிகவும் அழுதார். தனக்கு எப்படியாவது சிவதர்ஶனம் கிடைக்கவேண்டும் என்று ப்ரார்த்தித்துத் தீனமாக, 'ஆர்த்திஹர ஸ்தோத்ரம்' என்ற ஸ்தோத்ரம் செய்து ப்ரார்த்திக்கலானார். அந்த ஶ்லோகத்தில் மிகவும் அழகாக ஒரு விஷயம் சொல்கின்றார். ப்ரஹர, ஸம்ஹர, ஆஹர என்று ஒரு வேடன் தன்னுடைய ஆட்களுக்கு கட்டளையிட்டான். (ப்ரஹர - அடி, ஸம்ஹர - கொலை செய், ஆஹர - கொண்டுவா) அந்த வேடனுக்கும் ஶிவலோகம் சித்தித்தது, காரணம் அவனையும் அறியாமல் அவன் ஹர ஹர என்று சொல்லிவிட்டதனால் என்கின்றார். அப்படியிருக்கையில் ஶிவ பாஹி, ஶிவ பாஹி என்று கதறும் நான் உம்மை சேர்ந்தவனில்லையா என்று கேட்கின்றார்.

அந்த ஸமயத்தில் திருவிடைமருதூர் கோவிலில் இருந்து ஸ்ரீதர ஐயாவாளுக்குப் பழக்கமான ஒரு அர்ச்சகர் வந்து, ஸ்ரீதர ஐயாவாளுக்கு விபூதி, புஷ்பம் போன்ற ஶிவப்ராஸதங்களை கொடுத்துச் சென்றார்.



ஸ்ரீதர ஐயாவாள் அழுதுகொண்டே, அந்த ப்ரஸாதங்களைப் பெற்று கொண்டார். அந்த அர்ச்சகரை விழுந்து நமஸ்கரித்தார். வீடு திரும்புகையில் தான் ஒருவாறு உலக ஞாபகத்திற்கு வந்தார். அப்பொழுது, நம்மால் அக்கரைக்கு செல்ல முடியாதபொழுது, அர்ச்சகரால் மட்டும் எப்படி இக்கரைக்கு வரமுடியும் என்று சிந்திக்கலானார். மேலும், அவர் கொடுத்த விபூதியும் மழையில் நனையாமல் எப்படி இருந்தது என்றும் சிந்திக்கலானார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை.

மறுநாள் காவேரியில் வெள்ளம் குறைந்திருந்தது. கோயிலுக்குச் சென்று அந்த அர்ச்சகரைப் பார்த்து அத்தகைய வெள்ளத்திலும், மழையிலும் தனக்கு ப்ரஸாதம் எடுத்து வந்ததற்காக நன்றி தெரிவித்து வந்தனம் செய்யலானார். அந்த அர்ச்சகருக்கோ ஒன்றும் புரியவில்லை. நான் நேற்றய தினம் தங்களை பார்க்கவேயில்லையே! என்னால் மட்டும் எப்படி வெள்ளம் புரளும் காவேரியை கடந்து வரமுடியும். தங்களுக்கு எந்த ப்ரஸாதமும் நான் கொண்டு தரவில்லை என்று கூறினார். உடனே தன் பொருட்டு ஸாக்ஷாத் மஹாலிங்கஸ்வாமியே ப்ரஸாதம் கொண்டு வந்து தந்ததை உணர்ந்தார், கதறினார், புலம்பினார், செய்வதறியாது திகைத்தார். பரமேஶ்வரனை குறித்து தயாஶதகம் என்று ஒரு ஶதகத்தை அருளினார். இது போலவே நாமும் பகவானை த்ருட விஶ்வாசத்துடன் ஆஶ்ரயிக்கவேண்டும்.

# ‘‘வேதபாடசாலையின் இன்றைய நிலை’’

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

நம்முடைய ஸநாதன மதத்தின் மிகவும் அடிப்படையான விஷயம் வேதம். உலகத்தில் இன்றுவரை தோன்றி மறைந்தும், இருந்தும் வருகின்ற அநேக மதங்களுக்கும் ஒவ்வொரு ‘மதநூல்’ உள்ளது. அந்தந்த மதநூல்கள் தோன்றிய காலம் இன்னதென்றும், எழுதியவர் யார் என்றும் திட்டவட்டமாக வரையறுக்க முடிகின்றது. ஆனால் நம்முடைய மஹர்ஷிகளோ, வேதம், யாரொருவராலும் எழுதப்பட்டதல்ல (அபௌருஷேயம்) என்று கூறுகிறார்கள். வேதத்தை ஏற்றுகொண்ட பலர், ஆராய்ச்சி மனப்பான்மையுடன் வேதகாலத்தை ஆராய முயன்றனர். ஆனால், அவர்களால் ஒருமித்த காலத்தை நிர்ணயம் செய்ய முடியவில்லை. வேதத்தை ஏற்றுக்கொள்ளாத பௌத்தமத நூல்கள் கூட வேதம் அநாதி என்பதை மறுக்கவில்லை.

ஒரு நாஸ்திகன் ஒரு க்ரந்தம் செய்தானானால் அதில் நாஸ்திக வாஸனையே மேலோங்கி இருக்கும். அதுபோல், யாரொருவர் க்ரந்தம் செய்தாலும் அதில் அவரவர்களுடைய அபிப்ராயங்களே மேலோங்கி பக்ஷபாதமாகவே இருக்கும். ஆனால், வேதமோ யாரொருவராலும் எழுதப்படாததால் எந்த ஒரு பக்ஷபாதமும் இல்லாமல் இருக்கிறது. வேதம் யாரொருவராலும் எழுதப்படாதது என்றால், அது எப்படி லோகத்திற்கு வந்தது என்ற ஸந்தேகம் வரலாம். ஶாஸ்வதமான பொருளுக்கு மறைவு உண்டே தவிர ஒருக்காலும் அழிவு என்பதே இல்லை. அதுபோலவே, ஶாஸ்வதமான வேதத்திற்கும் அழிவு என்பது இல்லை. சிலகாலம் மறைந்தும் சிலகாலம் ப்ரகாஶமாகவும் அது காணப்படும்.

வேத ஶப்தங்கள் ஆகாஶத்தில் எப்பொழுதும் நிலைத்து இருக்கின்றன. நம்முடைய மஹர்ஷிகளிடம் அமானுஷ்யமான ஶக்திகள் நிறைந்திருந்தன என்பதில் யாருக்கும் எந்தவிதமான ஸந்தேகமுமில்லை. அத்தகைய மஹர்ஷிகள், தங்களுடைய திவ்யசக்தியினால் அந்த வேத ஶப்தங்களை க்ரஹித்து ஶிஷ்யப் பரம்பரையை ஏற்படுத்திக் கொடுத்ததனாலேயே வேதம் இன்றுவரை உள்ளது. ஆனாலும், இன்று நம் தலைமுறையில் இருக்கும் வேதபாகமானது மிகவும் குறைந்த அளவாகவே மிஞ்சியுள்ளது. ராமாயணம், மஹாபாரதம், பாகவதம் ஆகிய மூன்றும் நம்முடைய ஸநாதனமான மதத்தின் அடிப்படையான

புராணங்கள். ஸ்ரீமத் ராமாயணத்தைக் கூறவந்த வால்மீகி, ''வேத உபப்ரஹ்மணார்தாய'' அதாவது, வேதத்தில் உள்ள விஷயங்களையே விளக்கிக் கூறுவதற்காக ராமாயணம் வந்தது என்று கூறுகின்றார். மஹாபாரதத்தைச் சொல்ல வந்த வ்யாஸரோ, ''பஞ்சமோவேத:'' என்று ஐந்தாவது வேதமாகவே மஹாபாரதத்தைக் கூறுகின்றார். அதே வ்யாஸர் ஸ்ரீமத் பாகவதத்தை வேதம் என்கிற வ்ருக்ஷத்தில் பழுத்த பழமாகவே கூறுகிறார்.

வேதத்தில், ''ஸத்யம் வத'' என்ற ஒரு வார்த்தையைப் பூர்ணமாக விளக்குவதே ஹரிஶ்சந்தரனுடைய சரித்ரமாகும். ''தர்மம் சர'' என்ற ஒரு வார்த்தையைப் பூர்ணமாக விளக்குவதே தர்மபுத்ரருடைய சரித்ரமாகும். அதுபோல், அத்வைதம், விஶிஷ்டாத்வைதம், த்வைதம் என்ற ஸித்தாந்தங்களை ஸ்தாபித்த ஆதிஶங்கரர், ராமானுஜர், மத்வாச்சார்யர் ஆகிய மூவரும் யுக்தி வாதத்தால் தங்கள் ஸித்தாந்தங்களை ஸ்தாபிக்காமல் வேதத்தைக்கொண்டே ஸ்தாபித்தார்கள். உருவ வழிபாடு, அருவவழிபாடு, ஸித்தாந்தங்கள், பண்டிகைகள், மத ஸடங்குகள் போன்றவை எல்லா மதங்களிலும் காணப்பட்டாலும் அக்னிமூலமாக வழிபாடு என்பது இந்த வேத மதத்தில் மட்டுமே உண்டு.

உலகத்தில் எந்தமதமாகட்டும், அதில் ஸாரமான விஷயம் இருக்குமானால் அதை வேதத்தில் காண்பித்துவிடலாம். ஆனால், வேதத்தில் இல்லாத ஸாரமான விஷயத்தை வேறு எங்கும் காணமுடியாது. இன்றும் நம்முடைய பாரததேசத்தில் நாஸ்திகர்களாகத் தங்களைச் சொல்லிக்கொள்ளும் பலர், வாதங்களில் ஈடுபடும்பொழுது ஏதாவது ஒரு விஷயத்தை மறுக்கும் ஸமயத்தில், ''இது என்ன வேதவாக்கா?'' என்று தம்மையும் அறியாமல் வினவுவதிலிருந்தே வேதத்தின் பெருமை நமக்குப் புரிய வருகின்றது. Maxmuller, Willson உட்பட பல வெளிநாட்டவர்கள் நம்முடைய வேதத்தை ஆராய்ச்சி செய்துப் பல நூல்கள் எழுதியுள்ளார்கள்.

நம்முடைய தேசத்திலும் அரவிந்த மஹர்ஷி, பாலகங்காதர திலகர், தயானந்த ஸரஸ்வதி போன்றவர்கள் வேத ஸம்பந்தமான ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்கள் ஆவர். வேதத்தில் சில விஷயங்கள் வெளிப்படையாகவும் பல விஷயங்கள் ஸூக்ஷ்மமாகவும் உள்ளன. வேதத்தில் சில விஷயங்கள் விடுகதை போலவும், சில விஷயங்கள் உருவகப்படுத்தியும் காணப்படுகின்றன. உதாஹரணமாக, வேதத்தில் ஆயிரக்கணக்கில் கைகால்கள் உடையதாக பரமாத்ம ஸ்வரூபம் வர்ணிக்கப்பட்டு, அதனிடமிருந்து ப்ரஜைகள் உற்பத்தியானதாக வருகின்றது. குதர்க்கிகள்,

இந்துக்களுக்கு ஒரு கடவுள் இருக்கின்றது. அதற்கு ஆயிரம் கைகால்கள் உள்ளன. பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் அது தன்னுடைய கைகால்களைக் கொடுக்கிறது என்று விளக்கம் கூறுகிறார்கள். உண்மை அதுவல்ல. பிறக்கும் ஒவ்வொரு குழந்தையிடமும் எப்படி அதனுடைய தாய்தந்தையர்களுடைய சாயல் தவிர்க்க முடியாதோ, அது போலவே நாம் ஒவ்வொருவரும் பரமாத்மாவின் ப்ரஜைகள். ஆதலால் நம்மிடம் அதனுடைய சாயல் தவிர்க்க முடியாது என்பதையே வேதம் இவ்வாறு கூறுகிறது. ஆகவே, வேதத்தை குதர்க்கபுத்தியுடன் பார்க்காமல், விஶ்வாஸத்துடனும் பூஜ்யதா புத்தியுடனும் பார்த்தால் தெய்வத்தின் அருள் ஏற்பட்டு வேதத்தின் பொருள் புரியவரும்.

வேதமானது, கர்மம், உபாஸனை, ஞானம் என்று மூன்று காண்டங்களாக உள்ளது. கர்மகாண்டத்தில் ஶ்ரௌத ஸ்மார்த்த கர்மங்களைப்பற்றியும், உபாஸனாகாண்டத்தில் தேவதைகளைக் குறித்த ப்ரார்த்தனை பற்றியும், அதற்கான மந்த்ரங்களையும், உபநிஷத் முழுவதும் ஞானமார்க்கத்தைப் பற்றியும் விரிவாக கூறப்படுகிறது. வேதத்தில் உள்ள பல விஷயங்கள் முன்பு விஞ்ஞானிகளால் பரிஹாஸப்படுத்தப்பட்டன. ஆனால், இன்று விஞ்ஞானம் முன்னேற முன்னேற வேதத்தில் உள்ள பல விஷயங்களைக் கண்டு விஞ்ஞானிகள் வியப்பெய்துகின்றனர். வேதத்திலேயே விமானங்களைப் பற்றியும், நவீனமான வாஹனங்களைப் பற்றியும், அணுகுண்டு பற்றியும் கூறப்படுவதாக விஷயமறிந்தவர்கள் கூறுகிறார்கள். ஆனால் இன்று வேதத்தின் பல சாகைள் மறைந்து விட்டதால் கையில் உள்ள வேதத்தைக் கொண்டு அவைகளைச் செய்து காட்ட முடியாதென்பதென்னவோ உண்மை.

ஜகத்ஶ்ருஷ்டியில், ரூபம் முதன்மையானதோ அல்லது ஶப்தம் முதன்மையானதா என்கிற ஆராய்ச்சியில் ஶப்தமே முதன்மையானது என்று அறிஞர்கள் முடிவுக்கு வந்துள்ளனர். அந்த ஶப்தமே வேதம். வீடுகட்ட ஆரம்பிக்கும் ஒருவன் தனக்குத்தானே எப்படி ஒரு திட்டம் போட்டுக்கொள்கிறானா அதுபோல் பகவானும் ஸ்ருஷ்டிக்கு முன்பாக ஒரு திட்டம் போட்டுக்கொண்டான். அந்தத் திட்டம் தான் வேதம். ஆகையால், வேதத்தினுடைய அர்த்தம் மிக உயர்ந்ததாக இருந்தாலும் மிகவும் பயனுள்ளதாக இருந்தாலும் வேதத்திற்கு முக்யம் ஶப்தமே. வேத ஶப்தங்களை உலகில் எவ்வளவு நாள் நிலைத்து நிற்கச் செய்கிறோமோ அவ்வளவு நாள் உலகிற்கு சுபிக்ஷம். ஆகவேதான், வேதத்தை ஸம்ஸ்க்ருதத்தில் ஶ்ருதி என்றும், தமிழில் எழுதாக்கிளவி என்றும் கூறுகின்றோம். வேதமானது ஸமீபகாலம் வரை வாய்வழியாகவே காப்பாற்றப்பட்டு வந்துள்ளது.

ஸமுதாயத்தில் அனைவரும் ஸமம் என்ற போதிலும் ப்ராஹ்மணர்களிடம் வேதம் இருந்ததாலேயே அவர்கள் எல்லோராலும் வணக்கத்துக்குரியவர்களாக இருந்தனர். வனத்தில் உள்ள ராமபிரானைப் பார்க்க வந்த பரதனை நோக்கி, ராமர், ''லௌகீகமான ப்ராஹ்மணர்களை ஸேவிக்காமல் உள்ளாயா?'' என்று கேட்பதிலிருந்தே, வேதம் உள்ளதனால்தான் ப்ராஹ்மணர்களுக்கு ஸமுதாயத்தில் மதிப்பு என்பது தெரியவருகிறது. இஸ்லாமியர்களும் வெளிநாட்டவரும் நம்முடைய தேசத்தின் மீது பலமுறைப் படையெடுத்து நம்முடைய கலாச்சாரத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியபொழுதும், நம்முடைய மூதாதையர்கள் மிகவும் ஶ்ரமப்பட்டு வேதத்தை நமக்குக் காப்பாற்றிக்கொடுத்துள்ளனர்.

(தொடரும்)

ஸ்ரீ ஹரி:

**குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்**

24, நேதாஜி நகர், ஜாபர்கான் பேட்டை,
சென்னை-83.

## அறிவிப்பு

நமது மிஷன் சார்பில் ஜூலை '95 முதல் ''மதுரமுரளி'' தெய்வீக மாதப் பத்திரிகை வெளிவருகின்றது. இதில் அனைவரும் சந்தாதாரர்களாக சேர்ந்து பயனடைய கேட்டுக்கொள்கின்றோம்.

தனிப்ரதி ரூ.5/-

உள்நாடு : ஆண்டு சந்தா ரூ. 60/-
ஆயுள் சந்தா ரூ. 750/-

வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ. 300/-

ஏற்கனவே சந்தாதாரர்களாக இருப்பவர்கள் 2000-2001க்கான சந்தாவை புதுப்பித்தும், புது சந்தாதாரர்களை சேர்க்கும்படியும் கேட்டுக் கொள்கின்றோம்.

ஜனவரி 2000ல் சந்தாதாரர்களாக சேர்ந்தவர்கள் ரூ.30/- அனுப்பி 2000-2001 ஜூலை வரை சந்தாவை புதுப்பிக்கவும்.

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 63

*சொல்லாது சொல்லி நீ சொல்லற நில் என்று*
*சும்மாவிருந்தாய் அருணாசலா*

உலகில் யார் எதை உபதேஸம் செய்தாலும் அதை அவர் அனுஷ்டானத்தில் (அப்யாஸத்தில்) வைத்திருக்கவேண்டும். அதிகாலை ஸ்நானம் செய்து, அக்னிஹோத்ரம், ஔபாஸனங்களைக் கடைபிடித்து, இப்படி கர்ம அனுஷ்டானங்களை குறைவர செய்து வரும் ஒருவர் ஜனங்களைப் பார்த்து இந்த மார்க்கத்தில் ப்ரவர்த்திக்க வேணும் என்று உபதேஸம் செய்தால், மக்கள் செவ்வனே கேட்டு அதன்படி நடப்பர். காரணம், உபதேஸம் செய்பவரும் தான் சொல்வதை ஸ்வயம் அனுஷ்டிப்பவராக உள்ளார்.

அதுபோல், பாகவதர் ஒருவர் நித்யம் நாமஸங்கீர்த்தனம் செய்து, பகவத் ஆராதனம், பாராயணம், நித்யோத்ஸவங்கள் இவைகளை கடைபிடித்து வருவார் எனில், இவர் மக்களைப் பார்த்து பக்தி வழியை கடைபிடிக்க உபதேஸம் செய்தால், அதை மக்கள் கேட்பர். தெய்வீக வழியிலே எவ்விதத்திலும் ஸம்பந்தம் இல்லாமல் வாழ்ந்து வரும் ஒருவர் மற்றொருவரைப் பார்த்து, ''நீங்கள் பகவந் நாமாவை சொல்லி வந்தால், கஷ்டங்கள் தீர்ந்து விடும்'' என்றால், அதை கேட்பவர் செய்யமாட்டார். ஏனெனில் சொல்பவருக்கே அம்மார்க்கத்தில் நிஷ்டை இல்லை.

ஒருவர் செய்யும் உபதேஸத்தை மக்கள் கேட்பார்களே எனில், அவருக்கு 'தபஸ்' உள்ளது என்று அர்த்தம். 'தபஸ்' என்பதற்கு சுலபமாக அர்த்தம் சொல்ல வேண்டுமெனில், எவரெவர்கள் எந்த எந்த வழியை பின்பற்றுகின்றனரோ, அவரவர்களுக்கு அது அது தபஸாகும். உதாரணமாக, நாமஜபம் செய்து வருபவருக்கு நாமஜபமே தபஸ். கர்மானுஷ்டானங்கள் செய்து வருபவருக்கு ஆசார அனுஷ்டானங்களும், யாக, யஜ்ஞாதிகளுமே தபஸ். யோகியாக உள்ளவனுக்கு ப்ராணனை அடக்குவதே தபஸ். வேதாந்திக்கு எவ்வளவு நேரம் ஆத்மஸ்தானத்தில் மனதை ஒடுக்குகிறானோ அதுவே அவனுக்கு தபஸ். இந்த தபஸுடன் உபதேஸம் செய்தால்தான் பலிக்கும். இல்லாவிடில், அது ஒரு பொழுதுபோக்காகிவிடும்.

ஒரு குரு தன் சிஷ்யனைப் பார்த்து, பொய் சொல்லாதே என்று சொன்னால், அந்த குரு உண்மையையே பேசுபவராக இருக்கவேண்டும். அதேபோல், ஒரு குரு, சிஷ்யனைக் கோபப்படாதே என்று சொன்னால், குரு கோபமேபடாதவராக இருக்கவேண்டும். குரு சொல்லியும் சிஷ்யன் கேட்கவில்லை எனில், குருவிற்கு அவ்விஷயத்தில் தபஸ் இல்லை என்று அர்த்தம்.

ஒரு ஸமயம், ஒரு பத்திரிகை தனது தீபாவளி மலரில், பெரிய பெரியவாளின் Article வெளியிடவேண்டும் என்று ஆசைப்பட்டது. அந்த Article என்ன என்றால், உலகம் உங்கள் வாழ்க்கையில் கற்றுக் கொடுத்த, மறக்கமுடியாத பாடம் என்ன என்பதுதான். உங்கள் வாழ்க்கையில் நடந்த, மறக்கமுடியாத ஸம்பவம் என்ன என்று கேட்பது போல், ஒரு நடிகர், ஒரு Sportsman, ஒரு Spiritual leader என்று இப்படியாக அந்த Article இருந்தது. பலரும் பலவிதமாக சொன்னார்கள்.

பெரிய பெரியவா அந்த Articleல் என்ன சொன்னார் என்றால், ''உலகம் எனக்கு ப்ரதிக்ஷணமும் பாடம் கற்றுக்கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறது. அதைக் கற்றுக்கொள்ளும் புத்திதான் எனக்கு இல்லை'' என்று சொன்னார். உலகம் எல்லோர்க்கும் நல்லதையே சொல்லி வந்திருக்கிறது.

'சொல்லாது சொல்லி நீ', இங்கு சொல்லக்கூடிய உபதேஸம் மௌனமாக இருப்பதற்கான உபதேஸம். வாக்கினால் மௌனமில்லை. மனோ மௌனத்திற்கான உபதேஸம். மனதை அடக்குவதற்கு இல்லை. மனஸையே நாஶம் பண்ணிக் கொள்வதற்காக உபதேஸம். அப்படி உபதேஸம் பண்ணப் போகிறவர் அந்த ஸ்திதியில் இருக்கவேண்டும். அத்வைத ஸ்திதியில் இருந்து ப்ரும்ம ஸாக்ஷாத்காரமடைந்த ஒரு மஹான் சிஷ்யனை பார்த்து, 'ஆத்மாவை பார்க்க வேண்டும்' என்று உபதேசம் பண்ண வேண்டியதில்லை. அந்த நிலையிலேயே ஶிஷ்யனை கொண்டு போய் வைத்துவிட முடியும்.

உத்தம குருவிடம் போகும் ஒருவன் தனக்கு குருநாதர் எந்த ஒரு உபதேசமும் பண்ணவில்லையே என்று வருந்த வேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில், அவர் தனது கடாக்ஷத்தினாலும், தபோ பலத்தினாலும், திவ்ய சக்தியினாலும், அவனை எப்படி மாற்ற வேண்டுமோ, அப்படி மாற்றி விடுவார். சிஷ்யனைப் பார்த்து 'தியானம் செய்' என்று அவர் சொல்ல தேவையில்லை. தன்னுடைய ஆத்ம சக்தியினாலேயே வாயால் சொல்லாமலேயே மாற்றிவிடுவார்.

(தொடரும்)

# ஸ்ரீ செம்பொன்செய் கோவில் மஹா ஸம்ப்ரோக்ஷணம்

*ஸ்ரீமந் நாகபுரீ மத்யே ஹேமரங்க நிவாஸிநே*
*மஹா க்ருபாய பாதோதி ரங்கே ஸாயாஸ்து மங்களம்*

நம் ஸ்வாமிகளின் ப்ரேரணையால், 1998ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6-ந் தேதி திருஅரிமேய விண்ணகரம், ஸ்ரீ குடமாடுகூத்தர் திவ்யதேசத்திற்கும் 2000ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9-ந் தேதி திருத்தெற்றியம்பலம் ஸ்ரீ பள்ளிகொண்ட ரங்கநாதர் திவ்யதேசத்திற்கும் மஹாஸம்ப்ரோக்ஷணம் நடைபெற்றது. தற்பொழுது 15-11-2000 அன்று நம் ஸ்வாமிகளின் ப்ரேரணையால் செம்பொன்செய் கோவில் திவ்யதேசத்திற்கு ஸம்ப்ரோக்ஷணம் நடைபெற இருக்கிறது.

ஸ்ரீ செம்பொன்செய்கோயில், திருநாங்கூர் திவ்யதேசம், தமிழ்நாட்டில் சோழ மண்டலத்தில், தஞ்சை மாவட்டத்தில் சீர்காழி தாலுகாவில் சீர்காழி ரயில் நிலையத்திலிருந்து தென்கிழக்கே சுமார் 8 மைல் தூரத்தில் உள்ளது. காழிச்சீராம விண்ணகரம் என்னும் சீர்காழி அருகே, சீர்காழி ஆக்கூர் பஸ்பாதையில் திருவெள்ளக்குளம் என்னும் அண்ணன் பெருமாள் கோவிலிலிருந்து தென்கிழக்கே ஒரு மைல் தூரத்திலும் சீர்காழி திருவெண்காடு பஸ் பாதையில் மங்கை மடத்திலிருந்து மேற்கே 1½ மைல் தூரத்திலும் அமைந்துள்ளது. ஆழ்வார் அருளியபடி வேத நல்விளக்காகவும், ஸ்ரீ வைஷ்ணவர்களைப் பல திக்கிலிருந்து ஈர்க்கும் திசை விளக்காகவும் இது விளங்குகிறது.

ஸ்தலத்தின் பெயர் : செம்பொன்செய் கோவில், ஹேமரெங்கம், நாகபுரி, நாங்கை நகரம், நாங்கூர்.

எம்பெருமானின் திருநாமங்கள் : ஹேமரெங்கர், செம்பொன் அரங்கர், பேரருளாளன், தாமோதரன், வானவர்கோன், வேத நல்விளக்கு.

திருமங்கையாழ்வார் பெருமாளை காரணிமேகம் என்கிறார்.

பிராட்டியின் திருநாமம் : அல்லிமாமலராள்

விமானம் : கனகவிமானம்

புஷ்கரிணி : நித்யபுஷ்கரிணி

திருவரங்கன் எங்கும் ஶயன திருக்கோலத்தில்தான் ஸேவை ஸாதிப்பார். ஆனால் இங்கு எம்பெருமான் கிழக்கு முகமாக நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார்.

பெருமை : கோபுரம், மண்டபம், படிகள், கருடன், ஸந்நதி முதலியவைகள் ஸ்ரீ ராமபிரானால் செம்பொன்னினால் புதுப்பிக்கப்பட்ட பெருமை உடையது.

ப்ரத்யக்ஷம் : விஶ்வாமித்ரரின் புத்திரரான த்ருடநேத்ரர் என்ற மஹரிஷிக்கு ப்ரத்யக்ஷம்.

பாடிய ஆழ்வார் : ஸ்ரீ திருமங்கை ஆழ்வார்.

பெரிய திருமொழியில் 4-ம் பத்தில், 3-ம் திருமொழியில், 10 பாசுரங்களால் மங்களாஸாஶனம்.

பெருமாள் அவதார தினம் : எம்பெருமான், ஐப்பசி மாதம் ஸ்வாதி நக்ஷத்ரத்தில் அவதாரம். இத்தினத்தில் ''மணிகர்ணிகை'' எனும் காவேரியில் தீர்த்தவாரியும் விசேஷ திருமஞ்சனமும் திருமண்டபத்துடன் ப்ரஹ்ம உத்ஸவமும் ஆண்டுதோறும் நடைபெறுகிறது.

ஸம்ப்ரதாயம் : தென்கலை, ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயம்.

பூஜாக்ரமம் : ஸ்ரீ பாஞ்சராத்ர ஆகமமுறைப்படி இவ்வாலயத்தில் பூஜைகளும் விசேஷ உத்ஸவங்களும் நடைபெறுகின்றன.

உத்ஸவம் : ஐப்பசி ஸ்வாதி நக்ஷத்ரத்தில் முடியும்படி அதற்கு முன் 9 தினங்கள் ப்ரஹ்மஉத்ஸவம் நடைபெறுகின்றன. திவ்யப்ரபந்த வேத பாராயண கோஷ்டியும், புறப்பாடும் நடைபெறும்.

நாங்கை நன்னடுவுள் - ஸ்ரீ செம்பொன்செய் கோயில், திருநாங்கூர் திருப்பதிகள் பதினொன்றில் ஒரு அழகான ஹாரத்திற்கு நடுநாயகம் போல் நட்டநடுவில் உள்ளது. இவ்வாழ்வார், நந்தாவிளக்கே! என்று திருநாங்கூர்ப் பதிகங்கள் பதினொன்றில் மணிமாடக்கோவில் ஆரம்பித்து கவளயானைக் கொம்பொசித்த என்று திருப்பார்த்தன்பள்ளி அளவாகப் 11-திருமொழிகள் திருநாங்கூர் திருப்பதிகளைப் பாடுபவனவற்றுள் முன் ஐந்தும், நடுவில் ஆறாவதாக, பேரணிந்து உலகத்தவர் என்று ஆரம்பித்து செம்பொன்செய் கோவில் திருமொழியும், பின் ஐந்தும் உள்ளன.

மேலும் இங்கே, கோயில், திருமலை, பெருமாள் கோயில் என்ற மூன்று க்ஷேத்ரங்களின் சேர்த்தி உண்டு. இது செம்பொன் அரங்கன் கோயில் ஆகையாலும், ''மின்திகழ் குடுமி வேங்கட மலைமேல் மேவிய

வேத நல்விளக்கை'' என்பதால் திருவேங்கடமாகவும், ''பேரணிந்து உலகத்தவர் தொழுதேத்தும் பேரருளாளன்'' என்பதால் தேவப் பெருமாளாகவும் ஸேவை ஸாதிக்கிறார் எம்பெருமான்.

ஆழ்வார் இங்கு நித்யவாஸம் செய்து கைங்கர்யத்தில் ஈடுபடும் அடியார்களான பெரியோர்களை, ''சிறப்புடை மறையோர்'', ''திடமொழி மறையோர்'', ''திசைமுகன் அனையோர்'', ''செல்வ நான்மறையோர்'', ''செஞ்சொல் நான்மறையோர்'' என்றெல்லாம் பலபடியான விசேஷணங்களால் கொண்டாடுகிறார்.

**மன்றோங்க ஊர்வன் மடல் :**

பகவானின் திருமேனி ஸௌந்தர்யம் இணையற்றது. பகவானின் அழகுக்கேற்ற பிராட்டியும் அவனழகில் துவண்டு, அகலகில்லேன் இறையும் என்கிறாள். பிள்ளைபெருமாள் ஐயங்கார், செம்பொன் ரங்கனை ஒருமுறை ஸேவித்தார். அவன்மீது தீரா காதல் கொண்டு தான் நாயகியாக மாறினார். பிரிவாற்றாமையால் பெண்மைக்கு ஏற்ற பண்புகளை பொருட்படுத்தாமல் அரங்கனை எப்படியாவது அடைந்தே தீருவேன். அதற்காக மடலூரவும் தயங்கேன் என்கிறார்.

*''ஊர்வேன் மடலை யொழிவேன் மடநாணஞ்*
*சேர்வேன் கரிய திருமாலைப் - பாரறிய*
*அம்பொன் செய்கோமிலரங்கன் அணிநாங்கூர்ச்*
*செம்பொன் செய் கோவிலினிற் சென்று''*

(நூற்றியெட்டு திருப்பதி)
(அந்தாதி - 35)

இத்தனை சிறப்புகள் வாய்ந்த இத்திருப்பதி, ஸ்ரீ ஸ்வாமிகளின் ப்ரேரணையால், ''தர்மகல்பதரு'' ஸ்ரீ G.K. ராமமூர்த்தி அவர்களால் ஏகதேச திருப்பணி கைங்கர்யமாக சிறப்பாக செய்யப்பட்டு, மஹா ஸம்ப்ரோக்ஷணம் **நாளது 15-11-2000 அன்று காலை 9 மணிக்கு மேல் 10 மணிக்குள்** நடைபெற இருக்கின்றது.

---

## அறிவிப்பு

ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனைகள், "The Greatness of Bhagavan" ப்ரவசனம் CD வெளிவந்துள்ளன. ஒவ்வொன்றும் விலை ரூபாய் 100/-. இவை சென்னை ப்ரேமிக பவனத்தில் கிடைக்கும்.

# மஹாபாரத கதைகள்

— **நளோபாக்யானம்** (தொடர்ச்சி)

இந்திரன் நளனுக்கு, ''நான் இந்திரன், இவன் யமன், இது அக்கினி, இது வருணன்'' என்று சொன்ன பின், நளன் அவர்களை முறைப்படி வந்தனம் செய்து, யாது காரியமாக அவர்கள் தன்னைப் பார்க்க வந்திருக்கிறார்கள் என்றும், தான் அவர்களுக்கு என்ன உதவி செய்ய வேண்டும் என்றும் வினவினான்.

இந்திரன் அதற்கு, ''நளனே! நாங்கள் தமயந்தியை அடையும் பொருட்டு வந்துள்ளோம். எங்களுள் ஒருவர் தமயந்தியை அடையும்படி செய்வது உன்னால் இயலும் என்று நாங்கள் முடிவு செய்து உள்ளோம். எங்கள் பொருட்டு நீ தூது செல்வது அவசியம்'' என்றான்.

நளன் அதனைக் கேட்டு, மிகவும் துக்கித்துப் போனான். சிறிது நேரம் அவனுக்கு வார்த்தைகளே வரவில்லை. மனமோ ஸ்தம்பித்துப் போனது போலாகிவிட்டது. அவனும் தமயந்தியை அடையும் பொருட்டே அங்கு வந்துள்ளான். தமயந்தியானவள் அவன் ப்ராணன் போன்றவள். அவள் மீது உயிரையே வைத்துள்ளான் நளன். அப்படிப்பட்டவனான நளனிடம், தேவராஜனோ நளனுடைய ஆசையை நிராசையாக்கும் தனது ஆசையை வெளிப்படுத்தினான்.

பின்னர், சுதாரித்துக்கொண்டு, நளன் ஒருவாறு மனதில் முடிவு செய்துகொண்டான். தேவர்களானபடியால் இவர்களை எதிர்த்து பேசுவது என்பது இயலாது. எதிர்ப்பதால் லாபமில்லை. நமக்கு அவர்கள் இடையூறும் செய்யலாம். மேலும் இவர்கள் வணங்கத்தக்கவர்கள். எனக்கும் தமயந்தி வேண்டும். இவர்களும் என் மேல் கோபப்படுவதை தவிர்க்கவேண்டும். இதற்கு என்ன உபாயம் என்று ஆலோசித்து, ''தேவராஜனே! நான் தமயந்தியிடம் என் மனதை பறிகொடுத்தவன். அப்படி இருக்க, உங்கள் பொருட்டு, நான் எவ்வாறு அவளிடமே சென்று, என்னைத் தவிர அயலானை வரிக்க, எவ்வாறு கூறுவேன்? நானும் தமயந்தியின் ஸ்வயம்வரத்திற்கே சென்றுகொண்டு உள்ளேன்'' என்றான்.

இந்திரனிடமிருந்து நளன் தப்ப முடியவில்லை. இறுதியில் தேவராஜனே வென்றான். ''நளனே! நீ எனக்கு முன்னரே வாக்குக்

கொடுத்துவிட்டாய். உதவி செய்கிறேன் என்றும் தூது சொல்கிறேன் என்றும் வாக்குறுதி கொடுத்து, அதை மீறுவது மிகவும் தவறு. உன்னைப் போன்ற தர்மவானுக்கு அது அழகும் அல்ல. ஆதலால் தமயந்தியிடம் செல். அங்ஙனம் சென்று தேவர்களான இந்திரனும், யமனும், அக்னியும், வருணனும் உன்னை அடைய விரும்புகின்றனர். அவர்களுள் ஒருவனை நீ கணவனாக தேர்ந்து எடுப்பாய் என்று கூறு. இதனால் உனக்கு மேன்மையே வரும். கலங்காதே'' என்று நளனைத் தேற்றினான்.

மீண்டும் நளன், ''தமயந்தியின் அந்தப்புரத்திற்குள் நான் எப்படி நுழைவது? காவலாளிகள் இருப்பரே'' என்று வினவினான். இந்திரன் அதற்கு, ''எங்களது மாயையினால் ஒருவரும் உன்னைக் காண இயலாது. நேரே செல். தமயந்தியும் அவளது தோழிகளும் மட்டுமே உன்னைக் காண இயலும். அவ்விடத்திலும் உனக்கு யாதொரு இடையூறும் ஏற்படாது. தயங்காது செல்'' என்று வற்புறுத்தி அனுப்பினான்.

தேவராஜனால் இப்படி அனுப்பப்பட்ட நளன் அரண்மனைக்குள் ப்ரவேசித்து, அந்தப்புரத்தை அடைந்தான். ஒருவரும் அவனை அறிந்ததாக தெரியவில்லை. தமயந்தியும் அவள் தோழிகளும் இருக்குமிடத்தை நளன் அடைந்தான். அவனைப் பார்த்ததும், தமயந்தியும் அவள் தோழிகளும் மிகவும் ஆச்சர்யமடைந்தனர். அவனுடைய காந்தியும், ரூபமும் அவர்களுக்கு ஸந்தோஷத்தையே கொடுத்தது. அவனது குற்றமற்ற முகக்குறிப்பினாலும், தேஜஸினாலும், இவன் மஹாத்மாவாகவே இருக்கவேண்டும் என்று உணர்ந்து, அவனுக்கு மனதாலேயே நமஸ்காரம் செய்தனர். யாரும் பேசாதிருந்தனர்.

நளனுமே தமயந்தியை நேரில் பார்த்தவுடன் ஸந்தோஷமும், துக்கமும் கலந்தவனாக ஆனான். அவனுக்கும் பேச்சு எழவில்லை. தமயந்தியே முதலில் பேசினாள். ''வீரரே! நீர் யார்? பெண்கள் இருக்குமிடத்திற்கு நீர் வருவது தவறல்லவா? உமக்கும் இது தெரியுமல்லவா? எவ்வாறு காவலர்களை மீறி வந்தீர். அரசர் அறிந்தால் உம்மை தண்டிப்பார். உமது குற்றமற்ற முகத்தினால், நீர் மஹாத்மா என்று அறிகிறேன். உமக்கு ஹிதத்தை செய்ய விரும்புகிறேன். வந்த காரியத்தை சீக்கிரம் சொல்லும்'' என்றாள்.

நளன் தன் மனதை கல்லாக்கிக்கொண்டு, மேற்கொண்டு பேசலானான். ''தமயந்தி! நானே நளன். இப்பொழுது நான் இங்கு தேவதூதனாக வந்துள்ளேன். அதனாலேயே காவலர்கள் என்னை

அறியவில்லை. தேவர்களான இந்திரன், அக்னி, வருணன், யமன் ஆகியோர் உன்னை அடைய ஆவலுடன் இருக்கின்றனர். ஸர்வ வல்லமை பொருந்திய அவர்களில் ஒருவரை உனது பதியாக அடைவாய். இதை உனக்கு சொல்லவே, அவர்களால் உன்னிடம் நான் அனுப்பப்பட்டேன். ஆலோசித்து, முடிவு எடுப்பாய்'' என்றான்.

தமயந்தி நளனை வந்தனம் செய்து, மேலும் தேவர்களுக்கும் மனதால் வந்தனம் செய்து, நளனிடம் நளனே தனது மணாளன் என்று தான் முடிவு எடுத்திருப்பதாக சொல்ல ஆரம்பித்தாள்.

(தொடரும்)

# செய்திகள்

### செப்டம்பர் 28-ந் தேதி முதல் அக்டோபர் 6-ந் தேதி வரை

நவராத்ரீ மஹோத்ஸவத்தை ஒட்டி சென்னை ப்ரேமிகபவனத்தில், காலையில் ராமாயண மூல பாராயணமும் சதுர்வேத பாராயணமும், மாலையில் ராதிகா ஸ்தகம் ப்ரவசனமும் நடைபெற்றன.

மாதுரிஸகி ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு லக்ஷார்ச்சனை நடைபெற்றது.

### அக்டோபர் 2-ந் தேதி

சென்னை, அனகாபுத்தூர், பாலாஜி நகர், ஸ்ரீ ஏகாம்பரம் அவர்களின் க்ருஹத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில் நாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

### அக்டோபர் 7-ந் தேதி — விஜய தசமி

சென்னை ப்ரேமிகபவனத்தில், ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு சந்தன அலங்காரம் நடைபெற்றது. மதியம் ஸ்ரீ ஸ்வாமிகள் திருப்பதி சென்று திரும்பினார்கள்.

### அக்டோபர் 8-ந் தேதி — ஶ்ரவண தீபம்

சென்னை ப்ரேமிகபவனத்தில் - ஸ்ரீஸ்ரீநிவாஸ பெருமாளின் அவதார தினத்தை முன்னிட்டு காலையில் பெருமாளுக்கு சிறப்பு திருமஞ்சனம் நடைபெற்றது. ஸ்ரீ ஸ்வாமிகள், ஶ்ரவணதீபம் ஏற்றினார்கள்.

இரவு விசேஷ திவ்யநாமம் நடைபெற்றது. இதில் பெருமளவு பாகவத பெருமக்கள் கலந்துகொண்டார்கள்.

### அக்டோபர் 17-ந் தேதி முதல் 25-ந் தேதி வரை

சென்னை, தி.நகர், ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் வர்தந்தி ட்ரஸ்ட் சார்பில், சென்னை ப்ரேமிகபவனத்தில், ப்ரஹ்மஸ்ரீ P. ரவி ஶர்மா அவர்களால், ''ஸ்ரீமத் ராமாயண'' அயோத்யா காண்டம் உபந்யாஸம் நடைபெற்றது.

### அக்டோபர் 26-ந் தேதி

சென்னை ப்ரேமிகபவனத்தில் மாலையில் அஷ்டபதி பஜனை நடைபெற்றது.

### அக்டோபர் 27-ந் தேதி — ஸ்வாதீ— ஸ்ரீ ஸ்வாமிகளின் திருஅவதார தின வைபவம்

சென்னை ப்ரேமிகபவனம்: காலையில் பெருமாளுக்கு சிறப்பு ஆராதனைகள் நடைபெற்றன. ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி மஹோத்ஸவத்தை ஒட்டி ஆயுஷ்ய ஹோமங்கள் நடைபெற்றன. மதியம் ''கல்வைத்த வாரம்'' - வேத விற்பன்னர்களுக்கிடையேயான வேத திறமை போட்டி ஸ்ரீ ஸ்வாமிகளின் முன்னிலையில் நடைபெற்றது. வெற்றிப்பெற்ற வித்வான்களை மும்பை ஸ்ரீ G.K. ராமமூர்த்தி அவர்கள் கௌரவித்தார்கள். இரவு திவ்யநாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது. ஸ்ரீ ஸ்வாமிகளின் திரு அவதார தின வைபவத்தில் பெருமளவில் பாகவத பெருமக்களும், பக்தர்களும் கலந்துகொண்டார்கள்.

மதுரபுரி ஆஶ்ரமத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தியை ஒட்டி கிராமத்து மக்களுக்கு அன்னதானம் செய்யப்பட்டது.

சென்னை ஆலப்பாக்கத்தில் உள்ள மதுரமுரளீ பவனத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளின் பாதுகைக்கு அபிஷேக அர்ச்சனை, ஆராதனை நடைபெற்றன. ஆயுஷ்ய ஹோமம், ஆவஹந்தி ஹோமம் நடைபெற்றன.

பெங்களூர் ஸ்ரீ சங்கர நாராயணன் அவர்களின் க்ருஹத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தியை முன்னிட்டு ஸ்ரீ ஸ்வாமிகளின் பாதுகைக்கு அர்ச்சனை நடைபெற்றது.

ஆஹமதாபாத் ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் அவர்களின் க்ருஹத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி மஹோத்ஸவம் கொண்டாடப்பட்டது.

புதுதில்லி கௌரி ஸுகுமார் அவர்களின் க்ருஹத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி கொண்டாடப்பட்டது.

ஆஸ்த்ரேலியா ஸ்ரீ ரவி அவர்கள் க்ருஹத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி கொண்டாடப்பட்டது.

சென்னை திருவொற்றியூர் ராம் ராம் விஶ்வநாதன் அவர்கள் க்ருஹத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி கொண்டாடப்பட்டது.

### அக்டோபர் 29-ந் தேதி

சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீ ஸ்ரீராம் பார்த்தஸாரதி அவர்களின் ஸங்கீத கச்சேரி நடைபெற்றது.

### அக்டோபர் 30-ந் தேதி முதல் நவம்பர் 5-ந் தேதி வரை

சென்னை ப்ரேமிகபவனத்தில் யஜுர்வேத க்ரம பாராயணம் நடைபெறுகிறது.

---

## நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

---

### நவம்பர் 6-ந் தேதி முதல் 12-ந் தேதி வரை

பெங்களூர், கங்காதர் செட்டி ரோடு, ஸ்ரீ ஸ்ரீதாராம் மந்திரில், ஸத்ஸங்கம் ஸார்பில் நம் ஸ்வாமிகளின் முன்னிலையில் பாகவத பாராயணமும், உபந்யாஸமும், நவம்பர் 12-ந் தேதி ராதா கல்யாணமும் நடைபெற இருக்கின்றன.

### நவம்பர் 15-ந் தேதி

சீர்காழி அருகில் உள்ள திருநாங்கூர் செம்பொன்செய் அரங்கர் கோவில், மஹாஸம்ப்ரோக்ஷணம் நம் ஸ்வாமிகள் ப்ரேரணையால், நடைபெற இருக்கின்றது.

### நவம்பர் 30-ந் தேதி

சீர்காழி அருகில் உள்ள திருநாங்கூர் காவளம்பாடி திவ்யதேஶம் மஹா ஸம்ப்ரோக்ஷணம் நம் ஸ்வாமிகளின் ப்ரேரணைபடி நடைபெற இருக்கின்றது.

**மங்களானி பவந்து**

# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registrar of Newspapers for India Regd. No. TN/Chief PMG - 156/2000
R. No. 62828/95 Licensed to Post without prepayment WPP No. 52

வேணு : 6 | நவம்பர் 2000 | கானம் : 4




Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. ✆ : 8522656 / 8524256 Editor : S. Sridhar